Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 75 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.9**

| | | | |
|---|---|---|---|
| Name: | பழனி | Calling: | காவல் ஆய்வாளர் |
| Father's Name: | ராஜி | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 58 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 24.02.2026

(எதிரி ஆஜர்.)

அ.சா.9 முதன்மை விசாரணை

நான் தற்போது திருப்பத்தூர் கியூ பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த 2015 வருடத்தில் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தேன். நாட்றம்பள்ளி காவல் நிலையத்திற்கு கூடுதல் பொறுப்பும் வகித்தேன். நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண் 119/2015, சட்டப்பிரிவுகள் 394 இதச என்ற வழக்கில் எதிரிகளை தேடி வந்த நிலையில் 08.04.2015ம் தேதி 15.30 மணிக்கு நாட்றம்பள்ளி அடுத்த லட்சுமிபுரம் பஸ் ஸ்டாப்பிடம் பின்னால் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த முருகன் (எ) கானா முருகன் என்பவரை பிடித்து விசாரிக்க அவர் எந்த விதமான ஆசை வார்த்தையோ அச்சுறுத்தலோ தூண்டுதலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முருகன், த/பெ. செல்வம், நேரு, த/பெ.சஞ்சீவி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வாணியம்பாடி,

நாட்றம்பள்ளியில் பூட்டிய வீடுகளை உடைத்தும், பூட்டிய கார்களை உடைத்தும், கோவில் உண்டியல்களை உடைத்தும், பல இடங்களில் திருடியதாக ஒப்புக்கொண்டார். மேலும், திம்மாம்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நாராயணபுரம் ரோட்டில் உள்ள நாகாலம்மன்கோவில் பூட்டை உடைத்து ஆம்பிளிபையர் டெக் ஒன்று, உண்டியலை உடைத்து பணம் ரூ.1,500/– திருடியதாக ஒப்புக்கொண்டார்.

மேலும், அவ்வாறு திருடிய பணத்தை செலவு செய்துவிட்டேன் என்றும், திருடிய டெக்கை பழைய இரும்பு கடையில் போட்டுவிட்டதாகவும் வாக்கமூலத்தில் ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்த முருகன், நேருவை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்றத்திலும் ஈடுபட்டுள்ளார் என்ற சங்கதியை சம்மந்தப்பட்ட புலன்விசாரணை அதிகாரி திரு.மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் அவர்களுக்கு தெரிவித்து எதிரி முருகன் (எ) கானா முருகனின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான முருகன், நேரு ஆகியோரின் 161(3) வாக்குமூலங்களின் சான்றிட்ட நகல்களையும் திரு.மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். நான் விசாரித்தபோது சாட்சிகள் முருகன் மற்றும் நேரு ஆகியோர் மேற்படி குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து தெரிந்துகொண்டார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல்களை நான் திருப்பத்தூர் நீதிமன்றத்திலிருந்து 07.02.2020ம் தேதி CA.No.68/2020 என்ற மனுவின் மூலம் பெற்று இவ்வழக்கில் இணைத்துள்ளேன் என்றால் அதை நான் வாங்கவில்லை. கைது குறிப்பாணையை நான் வேலூர் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும்போது கைதி அதில் கையொப்பமிட மறுத்துவிட்டார் என்றால் அதை நான் கொண்டுசெல்லவில்லை, உதவி ஆய்வாளர் மோகன்தாஸ் தான் கொண்டு சென்றார். இவ்வழக்கில் எதிரியை நான் நேரடியாக கைது செய்யவில்லை என்றால் சரிதான், PT Warrant மூலம் கைது செய்தார்களா என்றால் நான் நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண்ணில் தான் கைது செய்தேன், திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்ணில் கைது செய்யவில்லை. நாட்றம்பள்ளிகாவல் நிலைய குற்ற எண்ணில் தான்

எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.
சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பழனி

SRIPATHI K Digitally signed by SRIPATHI K